KEMENTERIAN SUMBER MANUSIA

# "KERATAN AKHBAR KESUMA"

## AHAD
## 25 Januari 2026

| Akhbar | Makkal Osai |
|---|---|
| Tarikh | 25 Januari 2026 |
| Ruang | Nation |
| Muka Surat | 3 |

KEMENTERIAN SUMBER MANUSIA

மக்கள் ஓசை



## எச்.ஆர்.டி.கார்ப். புதிய தலைமைச் செயல் அதிகாரியாக

# டத்தோ முகமது ஷமீர் நியமனம்

HRD CORP
HUMAN RESOURCE DEVELOPMENT CORPORATION

**ராமேஸ்வரி ராஜா**

கோலாலம்பூர், ஜன. 25 - மனிதவள மேம்பாட்டுக்கழகம் (HRD Corp), அதன் புதிய தலைமைச் செயல் அதிகாரியாக டத்தோ முகமது ஷமீர் பின் அப்துல் அஸிஸை நியமனம் செய்தது. ஜனவரி 23 ஆம் தேதி தொடங்கி அதிகாரப்பூர்வமாக அவர் இப்பொறுப்பை ஏற்றார். டத்தோ முகமது ஷமீர், பொதுத்துறை, பல்வேறு மேம்பாட்டு நிறுவனங்களில் மூத்த தலைமைத்துவப் பொறுப்புகளை வகித்த அனுபவம் மிக்கவர். குறிப்பாக, நிறுவன மேலாண்மை, திசைநோக்கு மேலாண்மை, நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்துவதில் அவர் ஆழமான ஆற்றல் பெற்றவர்.

இப்புதிய பொறுப்பை ஏற்கும் முன்னதாக, அவர் பெண் தொழில்முனைவோருக்கு வியாபாரக் கடனுதவி வழங்கும் நாட்டின் முன்னணி நிறுவனமான அமானா இக்தியார் மலேசியா அமைப்பின் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றினார். அங்கு நிறுவனத்தின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும் சமூக-பொருளாதார வளர்ச்சியை முன்னெடுக்கவும் பல்வேறு முக்கியத் திட்டங்களை அவர் செயல்படுத்தியுள்ளார்.



கல்வித் தகுதியைப் பொறுத்தவரை, இவர் மலேசிய அனைத்துலக இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் நகர்ப்புற-வட்டாரத் திட்டமிடல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். இது கொள்கை உருவாக்கம், நிலையான மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைப்பதில் இவருக்குப் பெரும் உதவியாக அமைந்துள்ளது. நாட்டின் தேவைகளுக்கேற்பவும் முதலாளிகள், தொழிலாளர்களின் மாறிவரும் சூழலுக்கு ஏற்பவும், மனிதவள மேம்பாடு, திறன் பயிற்சியை முன்னெடுப்பதில் HRD Corp தீவிரம் காட்டி வரும் வேளையில், டத்தோ முகமது ஷமீரின் இந்த நியமனம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. மனிதவள அமைச்சர் டத்தோஸ்ரீ ரமணன் ராமகிருஷ்ணன் அவருக்கு நியமனக் கடிதம் வழங்கினார்.